வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022-23

## தமிழ்

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் 100

10X1=10

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

அ)சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் -----
   (அ) வைப்பு (ஆ) கடல் (இ) பரவை (ஈ) ஆழி
2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ----
   (அ) கோட்டெழுத்து (ஆ) வட்டெழுத்து (இ) சித்திர எழுத்து (ஈ) ஓவிய எழுத்து
3. 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   (அ) இரண்டு + திணை (ஆ) இரு + திணை (இ) இருவர் + திணை (ஈ) இருந்து + திணை
4. பள்ளிக்குச் சென்று கல்வி --- சிறப்பு
   (அ) பயிலுதல் (ஆ) பார்த்தல் (இ) கேட்டல் (ஈ) பாடுதல்
5. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் --- யும் ஓட்டி விடும்
   (அ) பாலனை (ஆ) காலனை (இ) ஆற்றலை (ஈ) நிலத்தை
6. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ----
   அ) பால் ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும் ஈ) பாஊறும்
7. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ------
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
8. கல்விப் பயிற்சிக்குரிய பருவம்
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
9. என் நண்பர் பெரும்புலவராக இருந்த போதும் ---- இன்றி வாழ்ந்தார்.
   அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி
10. புகழாலும் பழியாலும் அறியப்படுவது -----
    அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

ஆ).பொருத்துக. 4X1=4

11. மூன்றாம் வேற்றுமை – இராமனுக்குத்தம்பி இலக்குவன்
12. நான்காம் வேற்றுமை – பாரியினது தேர்
13. ஐந்தாம் வேற்றுமை – மண்ணால் குதிரை செய்தான்
14. ஆறாம் வேற்றுமை – ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்

II.எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 6X2=12

15. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
16. ஓவிய எழுத்து என்றால் என்ன?
17. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
18. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
19. சான்றோர்க்கு அழகாவது யாது?
20. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?
21. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
22. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
23. திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

III.எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4X2=8

24. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
25. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

26. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

27. வினைமுற்று என்றால் என்ன?

28. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

29. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

IV. அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

30. "வாழ்க நிரந்தரம்" – எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.

31. "தக்கார்" – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4x4=16

32. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

33. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

34. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

35. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

36. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

37. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.

VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி . 2x6=12

38. அ) பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

(அல்லது)

ஆ) இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுவீர்கள்?

39. அ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

VII. எவையேனும் ஒன்று மட்டும் விடையளி. 1x8=8

40. அ) "வெட்டுக்கிளியும் சருகுமானும்" – கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

VIII. கட்டுரை ஒன்றுக்கு மட்டும் விடையளி. 1x8=8

41. அ) நூலகம் (அல்லது) ஆ) நான் விரும்பும் கவிஞர்

IX. கடிதம் ஒன்றுக்கு மட்டும் விடையளி. 1x8=8

42. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) நீ சென்று வந்த சுற்றுலா குறித்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

X. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 8x1=8

43. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய். (எவ்வகைத் தொடர் எனக் கண்டறிந்து எழுதுக)

44. கோழி ---- (கூவும் / கொக்கரிக்கும்) (சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்தெழுதுக)

45. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும். (சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக).

46. உலக ஓசோன் நாள் செப்டம்பர் <u>16.</u> (அடிக்கோடிட்ட எண்களுக்குரிய தமிழெண்களை எழுதுக)

47. நடக்கிறது. (என்னும் வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக.)

48. உடலும் உயிரும் போல. (உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.

49. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.
(உரிய இடங்களில் நிறுத்துக் குறிகளை இட்டு எழுதுக)

50. திங்கள் – (என்னும் சொல்லை ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.)